1982 மார்ச் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி பொதுவானது. நீங்கள் ஏதோ உங்கள் தொகுதியில் உள்ள ஒரு பள்ளியை மனதில் வைத்துக் கேட்கிறீர்கள். அது கூடாது. கேள்வியை பொதுவானதாக, சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. மா. சின்னராசு : என்னுடைய தொகுதியில் சுமார் 7 பள்ளிகள் அப்படி இருக்கின்றன. இதைப் போன்ற பள்ளிக்கு குறைந்தது 5 ஆசிரியர்களையாவது நியமிக்க வேண்டும். அது மட்டுமல்ல. அந்தப் பள்ளிகளை நல்ல இடத்தில், மையமான இடத்தில் இருக்கும்படி மாற்றி அமைக்கவும் அரசு இந்தத் திட்டத்தின் கீழ் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்போது நாம் கல்வித்துறையின் கீழ் எடுக்கலாமா என்று பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். எடுப்பதாக இருந்தாலும் எடுக்காவிட்டாலும்—இதைப் போன்ற கருத்துக்களை, அந்தப் பள்ளிகளை கல்வித்துறை எடுக்கவில்லை என்றால், பரிசீலனைச் செய்து அந்தத் துறையே பரிகாரம் காணலாம்.

தனியார் பள்ளிகளில் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை பணியில் அமர்த்தும் திட்டம்

* வினா எண். 589—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ). தனியார் பள்ளிகளில் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை, பணியில் அமர்த்த வேண்டும் என அரசு ஆணை பிறப்பித்தும் செயல்படுத்தாதது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அதன் மீது, அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) வேலை நீக்கம் செய்யப்பட்ட சில ஆசிரியர்கள் பற்றிய வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. இவர்களைத் தவிர ஏனைய ஆசிரியர்கள் விஷயத்தில் குறிப்பிட்டுள்ள அரசு ஆணை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, மைனாரிட்டி பேரால் அல்லது தனியாரால் நடத்தப்படுகின்ற பள்ளிகளில் அரசு ஜீ. ஓ. போட்டாலும், உத்தரவு போட்டாலும் அந்த உத்தரவுகளை மானேஜ்மென்ட் வயலேட் பண்ணுவது எனக்குத் தெரியும். ஜீ. ஓ.க்களில் அரசாங்கம் என்ன சொல்லியும்

அவர்கள் அதைச் செய்வதில்லை. அந்த ஆசிரியர்களுக்கு மாற்று வேலை கொடுப்பதாக இருந்தால் அது அவர்களை இன்னும் விக்டிமைஸ் செய்வதாக இருக்கும் ; மானேஜ்மென்டுக்கு ஊக்க மளிப்பதாக இருக்கும். ஆகையால் இது பற்றி பப்ளிக் ஒப்பினியன் கிரியேட் பண்ண, மத்திய சர்க்கார் இன்கம்டாக்ஸ் டிபால்டர்களைப் பற்றிய விவரங்களை பத்திரிகைகளில் பப்ளிஷ் செய்து, பொது மக்கள் அறியச் செய்வதைப் போல இம்மாதிரி ஜீ. ஓ.க்களை வயலேட் செய்கின்ற மானேஜ்மென்ட் மீதும் பப்ளிக் ஒப்பினியன் கிரியேட் பண்ண அந்த மானேஜ்மென்ட் பற்றிய விவரங்களைப் பத்திரிகைகளில் வெளியிட அரசாங்கம் முன் வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, நாம் இப்போது இருக்கிற அதிகாரங்களை வைத்துக் கொண்டு, நாம் இடுகிற ஆணைகளை அவர்கள் நிறைவேற்றவில்லை என்றால் வேறு என்ன செய்யலாம் என்று யோசிக்கலாம். ஆனால், பள்ளிக் கூடம் அல்லது அந்த நிர்வாகம் தவறு செய்தால், அரசு ஆணையை மீறி நடந்தால் அந்த வட்டாரத்தில் இருக்கிற பொது மக்களுக்குத் தெரியும் வகையில் ஆசிரியர் சங்கங்கள் பல்வேறு முறைகளைக் கடைப்பிடிக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, இவ்வாறு அரசு உத்தரவு பிறப்பித்தும், ஆணை பிறப்பித்தும் அதை நிறை வேற்ற மறுக்கக் கூடிய தனியார் பள்ளிகளுக்கு அரசு வழங்கும் மானியத்தை நிறுத்துவதன் மூலம் அந்த உத்தரவை அவர்கள் நிறைவேற்றும் வாய்ப்பு நிச்சயமாக ஏற்படும் ; ஆகையால் அந்த வகையில் உத்தரவை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா? என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.20).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதைத்தான் நாம் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறோம். இதிலே வரும் சிரமம் என்னவென்று சொன்னால் மற்ற ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுப்பது நின்றுவிடும். நாம் தருகிற கிரான்ட் பெரும்பாலும் ஆசிரியர்களுக்கு சம்பளம் தருவதற்குத் தான். ஆகவே, நாம் கிரான்ட் நிறுத்தினால் அது மற்ற ஆசிரியர்களுக்கு சம்பளம் தராமல் நிறுத்துவதைப் போல் ஆகிவிடுகிறது. இதுதான் இதிலே இருக்கும் சங்கடம்.

உடற்கல்வி பயிற்சி பெற்ற இடைநிலை ஆசிரியர்கள்.

*வினா எண் 590—செல்வி பி. விசயலட்சுமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—